மறுசீரமைப்புகளுடன் வெற்றிகரமான தேசத்தை நோக்கி !

# சிவில் சமூக கொள்கை
# மறுசீரமைப்பு முன்மொழிவுகள்

## வீதி எதிர்ப்பு
## சிவில் அமைப்புக்களின் செயற்பாடு



## முகவுரை:

2015 தை மாதம் 8ம் திகதி நடைப்பெற்ற ஜனாதிபதித் தேர்தலானது அதி தீர்மானமிக்கதான தேர்தலாகும். நாட்டின் கொள்கை வழியிலான மாற்றத்திற்கான முக்கியத்துவத்தை அரசியல் கட்சிகளை மட்டுமல்லாது, சிவில் சமூக செயற்பாட்டு அமைப்புகளையும் ஆழமாக உணரவைத்த மற்றும் செயற்படுவதற்கு அழுத்தத்தை கொடுத்த தேர்தலாகும்.

நாட்டிற்குள் நடைப்பெற்ற யாப்பு ரீதியான சர்வாதிகாரத்தை ஒழித்து நாட்டிற்கு உகந்த புதிய அரசியல் யாப்பிற்காக செயற்படுவதற்காக தம் செயற்பாடுகளை வியாப்பித்த சந்தர்ப்பமாக்கப்பட்டதைப் போலவே சட்ட இறைமையை நிறுவுவதற்கும், அனைத்து இன மற்றும் மதங்களை சமமாக மதிக்கின்ற, சமூகத்திற்காக சேவை செய்வதன் முக்கியத்துவத்தை மிக ஆழமாக தோற்றுவித்த காலமாக இவ் தேர்தல் காலத்தை அறிமுகப்படுத்தலாம். நாட்டின் வளங்களை மக்களிடமிருந்து பறித்து தேசிய மற்றும் சர்வதேச முதலீட்டாளர்களுக்கு வழங்கும் செயற்பாடு நாட்டின் அபிவிருத்தி என்ற பெயரில் அறிமுகப்படுத்தப்பட்டதோடு இவ் அழிவுமிக்க மக்கள் துரோக செயல்கலுக்கு எதிர்ப்பை தெரிவித்தவர்கள் தேச துரோகிகள் அல்லது பொருளாதார கொலையாளிகளென அறிமுகப்படுத்தப்பட்டார்கள். அபிவிருத்தி என்ற பெயரில் மக்களை இடம்பெயரச் செய்தல், அதற்கு எதிர்ப்பு தெரிவித்தவர்களை காணாமலாக்கச் செய்தும் முன் கொண்டுச் செல்லப்பட்ட மக்கள் துரோக செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் தேவைப்பாடானது சிவில் செயற்பாட்டாளர்களின் பிரதான தேர்தல் இலக்காக அமைந்தது.

எனினும் தனி ஒரு நபரின் இடமாற்றத்தினால் (பதவி மாற்றத்தினால்) மட்டும் இம்முன்னெடுப்பை தடுத்து நிறுத்த இயலாதென்பது சிவில் செயற்பாட்டாளர்களுக்குள்ள சிறந்த அனுபவமாகும். எனவே சிவில் அமைப்புகள் "மறுசீரமைப்புடனான மாற்றம் தொடர்பாக செயற்படுத்துவதற்கு முன் வர வேண்டியேற்பட்டதோடு, "மறுசீரமைப்புடனான மாற்றத்திற்கான கொள்கை ஒன்றை தயாரிப்பதற்காக பரந்தளவிலான மக்கள் செயற்பாடு மற்றும் ஒத்துழைப்பிற்காக செயற்பட்டு 112 சிவில் அமைப்புக்களின் அனுமதியுடன் கூடிய ஒருங்கிணைந்த கொள்கை தயாரிக்கப்பட்டது.

இவ்வறிக்கையானது 2014 நவம்பர் மாதம் 25ம் திகதி கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக நடைப்பெற்ற மக்களின் ஆர்பாட்ட ரீதியான கூட்டத்தின் பொழுது நாட்டின் எதிர்கட்சி தலைவர் உட்பட 12ன் அரசியல் தலைவர்களுக்கு கையளிக்கப்பட்டது. மேலும் திருத்தியமைக்கப்பட்ட இந்த அறிக்கையை 2014 மனித உரிமை தினத்ததன்று அப்போதைய எதிர்க்கட்சிகளின் பொது சனாதிபதி வேட்பாளரும் தற்போதைய சனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன அவர்களுக்கு கையளித்தமை இந்த தொடர் செயற்பாட்டின் மேலும் ஒரு முக்கிய சந்தர்ப்பத்தை எடுத்துக்காட்டியது.

இவ்மறுசீரமைப்பு முன்மொழிவுக்குள் நல்லாட்சியை உருவாக்குவதாக உறுதியளித்த மைத்திரிபால சிறிசேன அவர்களின் அரசின் 100 நாள் வேலைத்திட்டம் தொடர்பாக ஆய்வுக்கு உட்படுத்தியதன் ஊடாக, இதுவரை எங்கள் நாட்டிற்கு அவசியமான மறுசீரமைப்பை செயற்படுத்துவதற்கு அடியெடுத்து வைத்தமை தொடர்பாக எங்களுடைய நன்றிகளை செலுத்துவதோடு, அவை நாட்டிற்கு பெற்றுக்கொள்வதற்கு இயன்றமை நாம் அனைவரும் எதிர்பார்திருந்த மாற்றத்தினுள் அடிப்படை சாதகமாக அமைந்த தனிநபர் காரணியும் ஒரு முக்கிய காரணி என்பதனை நாம் குறிப்படுகின்றோம்.

ஆனாலும் நாம் எதிர்பார்த்த மாற்றத்திற்கு செல்வதற்கு பயணிக்க வேண்டிய தூரம் இன்னும் அதி விசாலமாகும். இதுவரை நாம் கைப்பற்றியிருப்பது இதன் அடித்தளத்தை மட்டும் என்பதினை நாம் புரிந்துக் கொள்வோம். அதைப்போலவே எமக்குத் தேவையான மறுசீரமைப்புக்காக மக்களுடைய பங்களிப்புக்கான சந்தர்ப்பம் மிக அதிகரித்துக் காணப்படுவதை இன்று நாம காணக்கூடியதாகவுள்ளது. இந்நிலைமையை பாதுகாத்துக் கொள்வதற்காக நாம் மேலும் தியாக பங்களிப்புடன் செயற்பட வேண்டும்.

முன்பிருந்த இருண்ட யுகத்தை நோக்கி நாடு மீண்டும் பயணிக்காமல் இருப்பதையே, புதிய அரசாங்கமொன்றை உருவாக்குவதற்காக முன்மொழியப்பட்டுள்ள தேர்தலுக்குக்கான இச்சந்தர்ப்பத்தில் நாம் எதிர்பார்க்கின்றோம். இனவாதத்தை தோலில் சுமந்து கொண்டு அதிகாரத்திலிருந்த அதிகார பேராசைக்கொண்ட சில அரசியல்வாதிகள், மீள இனவாதத்தினை தங்களது பிரதான கோசங்களாக கொண்டு

2015 பொதுத்தேர்தலுக்கு முன்வந்துள்ள சந்தர்ப்பத்தில் எங்களுடைய செயற்பாடுகளை இன்னும் அதிகமாக உறுதிபடுத்திக் கொண்டு நாட்டை இருண்ட யுகத்திற்கு கொண்டு செல்வதற்கு இடமளிக்காமல் திடத்துடன் செயற்படுவோம்.

நூறு நாள் வேலைத்திட்டத்திற்குள் செயற்பட்ட அரசாங்கமானது நல்லாட்சிக் கொள்கைகளை எந்தளவு நடைமுறைப்படுத்தியது என்பது தொடர்பான அவதானத்தைச் செலுத்த வேண்டும்.

வெளிப்படைதன்மையுடன் தம் பொறுப்புக்களை நிறை வேற்றுவதில் மற்றும் பொறுப்பு கூறலிற்கேற்ப மக்களுடைய குரலுக்கு எந்தளவு செவிமடுத்து மக்கள் பங்குபற்றலை உறுதிச்செய்த விதம் தொடர்பாக நாம் மதீப்பீடு செய்து கொள்ள வேண்டும். ஆனாலும் இதை 2015 தை மாதம் 8ம் திகதிக்கு முன் ஆட்சியிலிருந்த அரசாங்கத்துடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். அத்தோடு நாம் பெற்றுக்கொண்ட வெற்றியை மேலும் அதிகரித்துக்கொள்ளும் திசையை நோக்கி அதிகமாக செயற்பட வேண்டியவர்களாக உள்ளோம்.

இவை அனைத்திற்குள்ளும் வினைதிறன்மிக்க சிவில் செயற்பாட்டினால் நடைமுறைப்படுத்தக்கூடிய சமூக மறுசீரமைப்பிற்கான தொடர்தேர்ச்சியான செயற்பாட்டிற்காக அனைத்து சமூக செயற்பாட்டாளர்களையும் அழைக்கின்றோம்.

**வீதி எதிர்ப்பு செயற்குழு**
**2015 ஜூலை 10**

# உள்ளடக்கம்


01) சனநாயக மறுசீரமைப்பு முன்மொழிவுகள்------------------------------- 05

02) இனவர்க்க பிரச்சினைக்கான தீர்வை தேடுதல்--------------------- 06

03) கருத்துச் சுதந்திரம்---------------------------------------------------------- 07

04) கடத்தப்படுதல்(காணாமலாக்கப்படுதல்) மற்றும் தனிநபர் சுதந்திரம் தொடர்பான முன்மொழிவுகள்------------------------------- 08

05) சித்திரவதை தொடர்பான முன்மொழிவுகள் ---------------------- 10

06) சுகாதாரத்துறை------------------------------------------------------------------- 11

07) தேசிய வைத்திய முறை முன்னேற்றம்--------------------------------- 11

08) கல்வித்துறை--------------------------------------------------------------------- 12

09) பெண்களின் உரிமைகள் பாதுகாப்பதற்காக----------------------- 13

10) கலாச்சாரம் மற்றும் கலை------------------------------------------------ 14

11) மதச் சுதந்திரம்------------------------------------------------------------------ 15

12) இயற்கையை பாதுகாத்தலுக்கான முன்மொழிவுகள்------------- 16

13) காணி உரிமையை உறுதிச்செய்தல் மற்றும் இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றுதல்-------------------------------------------------- 16

14) பாதுகாப்பான உணவு மற்றும் நிலையான விவசாயம் தொடர்பான முன்மொழிவுகள்------------------------------------------------ 17

15) தேசிய மீனவன் மற்றும் மீனவ மக்கள் வாழ்க்கையை முன்னேற்றுதல்------------------------------------------------------------------- 19

16) பெருந்தோட்டத்துறை மக்களின் வாழ்க்கையை வலுப்படுத்துவதற்கான முன்மொழிவுகள்------------------------------- 20

17) தொழிலாளர் மக்கள் தொடர்பான முன்மொழிவுகள்------------ 21

18) இவ் அறிக்கையை தயார் செய்வதற்கு ஒத்துழைப்பு நல்கிய அமைப்புக்கள்-------------------------------------------------------------------- 21

## 01 - சனநாயக மறுசீரமைப்பு முன்மொழிவுகள்

1.1 நிறைவேற்று ஜனாதிபதிமுறையை ரத்துச் செய்து நாட்டிற்கு சாதகமான புதிய அரசியல் யாப்பை உருவாக்குவதற்கு படிமுறை எடுக்க வேண்டும். அத்துடன் இதற்காக நாட்டிற்குள் போதியளவிலான விவாதங்களை உருவாக்குவதனூடாக உகந்த அரசியல் யாப்பு உருவாக்கத்திற்கான ஒத்துழைப்பை வழங்கவதற்கு நாட்டின் மக்களுக்கு சந்தர்ப்பத்தினை வழங்க வேண்டும்.

1.2 நாட்டில் நடைமுறையிலுள்ள தேர்தல் முறைமையை மாற்ற வேண்டும். எண்ணிக்கையளவிலான சிறுபான்மையினரின் மற்றும் சிறுபான்மை கட்சிகளுக்கு உகந்த பங்குபற்றுதலை பெற்றுக்கொடுக்க கூடியவாறு செயற்படல்.

1.3 சாதாரணமான மற்றும் விகிதாசார பங்குபற்றுதல் சிறுபான்மையினருக்கும் கிடைக்க கூடியவாறு தேர்தல் அதிகார பிரதேசங்களில் எல்லை வரையறைகளை தீர்மானிக்க வேண்டும்.

1.4 சர்வதேச மனித உரிமை கவுன்சிலினால் உடன்பட்டுள்ளவாறு பொருளாதார, சமூக, கலாச்சார உரிமைகள் மற்றும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சமவாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உரிமைகளை ஏற்றுக்கொள்ளுதல்.

1.5 அரசாங்கங்கள், மதங்களுக்கு அடிப்பணிவதில்லை என்ற நிலை அரசியல் யாப்பிலே உறுதி செய்யப்பட வேண்டும். அதனோடு சகல இனங்களும் மற்றும் மதங்களும் சமமாக மதிப்பளிக்கப்படுவதை உறுதிச் செய்தல் வேண்டும்.

1.6 எண்ணிக்கையளவிலான சிறுபான்மை இனங்கள் தொடர்பாக அரசியல் யாப்பிற்கேற்ற தீர்மானங்களை மேற்கொள்ளும்போது அவர்களின் கருத்துக்களைப் பெறுவதற்காக அவர்களிடமிருந்து பொது வாக்கெடுப்பு ஒன்றை நடாத்தி அனுமதியை பெற்றுக்கொள்ளுதல்.

1.7 ஆதிவாசி மக்களின் பாரம்பரிய உரிமையை ஏற்றுக்கொள்வதற்கு யாப்பில் உறுதிசெய்ய வேண்டும். அத்தோடு அவர்களின் வேட்டையாடுதல் மற்றும் உணவிற்கான பொருட்களை ஒன்று சேர்ப்பதற்கான நடவடிக்கைகளை அவர்களின் உரிமையாக ஏற்றுக்கொண்டு அதற்கான காணிகளை அவர்களின் பாரம்பரிய உரிமையாக உறுதி செய்தல் வேண்டும்.

1.8 LLRCன் அனைத்து சிபாரிசுகளையும் செயற்படுத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்தல்.

- யுத்தத்தினால் ஏற்படுத்தப்பட்ட அழிவுகள் தொடர்பாக நாட்டு மக்கள் அனைவரும் தெரிந்துக்கொள்ளும் முகமாக உண்மையான ஆணைக்குழுவை நிறுவுதல்.
- மனிதபிமானத்திற்கெதிரான குற்றங்களைப் போலவே போர்க்குற்றம் தொடர்பாகவும் விசாரிப்பதற்கு மற்றும் தண்டணை வழங்குவதற்காக சட்டமா திணைக்களத்தின் சுயாதீனமான விசுவாசமிக்கதான பொறிமுறை ஒன்றினை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

## 2 - இனவர்க்க பிரச்சினைக்கான தீர்வை தேடுதல்

2.1 அதிகாரத்தை பகிர்தளிப்பதன் அடிப்படையிலான அரசியல் தீர்வின் ஒன்றின் மூலமாக இனவர்க்கப் பிரச்சினைக்கான தீர்வுகளை தேடுவதற்கு முற்படல்.

2.2 இனவர்க்கப் பிரச்சினைக்கான தீர்வுகளை தேடுவதற்காக அனைத்து இனங்களுக்கிடையிலும் கலந்துரையாடல்களை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல். ஐக்கிய நாட்டிற்குள் பொதுவான உடன்பாட்டுடனான தீர்வை முன் வைத்தல். எண்ணிக்கையளவிலே சிறுபாண்மை இனத்தவர்களினால் முன்மொழியப்படும் தீர்வுகளுக்கு, பெரும்பாண்மை சிங்கள இனத்தவரிடையே இணக்கத்தை ஏற்படுத்துவதற்கான பொறுப்பை அரசாங்கம் கொண்டிருக்க வேண்டும்.

2.3 அனைத்து இனங்களினதும் மொழி உரிமையை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

2.4 இனம், வர்க்கம் என்ற அடிப்படையில் நடைபெறும் துவேசமிக்க செயற்பாடுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல்.

2.5 அளுத்கமையில் நடந்த மனிதத்துவத்திற்கெதிரான செயற்பாடு தொடர்பாக பரிசீலனை செய்வதற்கான ஆணைக்குழுவொன்றினை நியமித்தல்

## 3- கருத்துச் சுதந்திரம்

3.1 முன்மொழியப்பட்டுள்ள தரவுகள் தெரிந்து கொள்ளும் உரிமை தொடர்பாக சட்ட வரைவம் மக்கள் மத்தியில் விவாதத்திற்கு உட்படுத்தி, தயாரிக்கப்படும் கடைசி கருத்து முன்மொழிவுகளை பாராளுமன்றத்தில் நிறைவேற்றிக் கொள்ளுதல். வெளியீடுகளின் சுதந்திரம் தொடர்பாக யாப்பில் உள்ளடங்கிய நிலைமைகளை அரசியல் யாப்பில் உறுதிசெய்து 1973 பத்திரிகை சபை சட்டத்தை ரத்துச் செய்தல்

3.2 அரச நிதி மற்றும் அரச முகாமைத்துவத்தில் இலங்கையில் நடைபெறுகின்ற அனைத்து ஒலி, ஒளிபரப்பு சேவைகள் பொது மக்கள் உடமை சபையாக மாற்றம் செய்யப்பட வேண்டிதோடு அது எந்த விதத்திலும் அரச அதிகாரத்திற்கு உட்படுத்தாது பொதுமக்கள் சேவை வெகுசன ஊடக கோட்பாட்டின் (Public Service Media) கீழ் செயற்படுத்துதல்.

3.3 மின் ஊடகங்களுக்கான சுயாதீன ஒலி, ஒளிபரப்பு அதிகாரச் சபையை நிறுவி மக்கள் வானொலி நிலையம் மற்றும் தொலைக்காட்சி சேவைகளை நடைமுறைப்படுத்துவதுடன் கொள்கை வழிகாட்டல்களை சட்டத்தில் உருவாக்குதல்.

3.4 இணையத் தளங்களில் விவாதமிக்க சனநாயகத்திற்கான மிக முக்கியமானது இணையத்தள ஊடக கட்டமைப்பு என்பதை கருதுமாறும், கருத்துச் சுதந்திரத்திற்காக இணையத்தளங்களுககுள்ளே வசதிகளை பரவலாக்கக்கூடிய வகையில் கொள்கைக வியாப்பிக்குமாறும், நடைமுறையில் செயற்படும் இணையத்தள பதிவுகளை ரத்துச் செய்யவும் ஏனைய பதிப்பகங்கள் மற்றும் மின் ஊடகங்களை மற்றும் ஊடகவியலாளர்களுக்கு கிடைக்கும் உரிமைகள், வசதிகள் மற்றும் சந்தர்ப்பங்கள் இணையத்தள ஊடகவியலாளர்களுக்குப் போலவே இத் துறையில் செயற்படும் இணையத்தள சேவையாளர்களுக்கும் சமமான உரிமை கிடைக்கும் வகையில் சட்ட திட்டங்கள் உருவாக்கப்படுதல் முக்கியமாகும்.

3.5 ஊடக அமைப்புகளின் மற்றும் ஊடகவியலாளர்களின் பொறுப்பு சுயாதீனமான ஒழுக்கநெறி கோவை ஊடாக சுயாதீன தன்மைக்கு ஒத்துழைப்பு நல்குதலும்.

3.6 ஊடகவியலாளர்களுக்கு தம் தொழில் செயற்பாடுகளை வளர்ப்பதற்கு தேவையான பயிற்ச்சி மற்றும் அறிவை பெற்றுக்கொடுப்பதற்கு தேவையான தேசிய மற்றும் சர்வதேச சக்திகள் மற்றும் சந்தர்ப்பங்களுக்கு அரச ஒத்துழைப்பை நல்கி மற்றும் அவைகளை ஊக்குவிப்பதற்கு தேவையான கருவியை நிறுவுதல் மிக முக்கியமாகும்.

## 04 கடத்தப்படுதல் மற்றும் தனிநபர் சுதந்திரம் தொடர்பான முன்மொழிவுகள்

4.1 தடுப்பிலுள்ளவர்களை விடுதலை செய்ய வேண்டியது நீதி மன்றங்களினால் அல்லது அவர்களின் குடும்பங்களுக்காகும். அதேபோன்று ஒரு உத்தியோகஸ்த்தர் தனிநபர்களை கைதுசெய்தல் அல்லது தடுத்து வைத்தல் அல்லது வேறொரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு மாற்றுதல் தொடர்பான சட்டங்களை சரியாக பின்பற்றாது தவறவிட்டால் அதற்கெதிராக சட்ட செயன்முறைகளை எடுப்பதற்கு இயலுமானதான வசதிகள் இருக்க வேண்டும்.

4.2 பலவந்தமான காணமலாக்குதலுக்கு எதிராக இலங்கை அரசு ஐக்கிய நாடுகளின் பிரகடனத்தை அமுல்படுத்த வேண்டும்.

4.3 காணமல் போனவர்கள் தொடர்பாக LLRC அறிக்கையில் மற்றும் UPR அறிக்கையின் குறிப்பிட்டுள்ள சிபாரிசுகளை செயற்படுத்தல்.

4.4 இதுவரை காணாமலாக்கப்பட்டமை தொடர்பாக் விசாரனை செய்வதற்காக நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்களின் அறிக்கைகளை வெளியிடுதல். அவ் அறிக்கைகளின் சிபாரிசுகளை செயற்படுத்துதல்.

4.5 கடந்த சிவில் போர்க்காலத்தில் இடம்பெற்ற காணாமலாககப்பட்டமைகளை விசேட நிலைமையாக கருதி அது சம்பந்தமாக விசாரனை செய்வதற்கு நீதிமன்ற அதிகாரத்துடன் கூடிய சுயாதீன ஆணைக்குழு சபையொன்றினை நியமித்தல்.

4.6 கடத்திச் செல்லுதல் காணாமலாக்குதல் மற்றும் தடுத்து வைத்தல் தொடர்பாக தற்பொழுது நீதிமன்றத்திற்கு தாக்கல் செய்யப்பட்டிருக்கும் வழக்குகளை உடனடியாக தீர்த்து பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக நீதி கிடைப்பதற்கான ஏற்பாடகளை தயாரித்தல்.

4.7 காணாமல்போன தம் குடும்ப அங்கத்தவர்களுக்கு நடைப்பெற்ற சம்பவம் தொடர்பாக அக்குடும்பத்தின் ஏனைய அங்கத்தவர்களுக்கு மற்றும் நாட்டிற்கு பகிரங்கப்படுத்துவதற்கான முறையொன்றினை தயாரித்தல்.(உண்மையை தேடும் ஆணைக்குழு)

4.8 சமூக புதைக்குழிகள் உள்ளதாக நம்பப்படும் பிரதேசங்களில் இராணுவ முகாம்களை நீக்குதல் மற்றும் அவ்விடங்கள் தொடர்பாக பரிசோதித்து பார்ப்பதற்கு உகந்த குழுவொன்றினை நியமித்தல்.

4.9 காணாமலாக்கப்பட்ட பாதிக்கப்பட்டோர் மற்றும் அவர்களின் குடும்பங்களிலுள்ளவர்களுக்கு சாதாரணமான மற்றும் போதியளவிலான நிதி நஷ்டஈடு கொடுப்பனவுகள், கிடைக்காத சம்பளம், ஊழியர் சேமலாபநிதியம், காப்புறுதி நிதி மற்றும் வங்கி கணக்கிலுள்ள நிதிகள் அவர்களின் தங்கி வாழ்வோருக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.

4.10 ஐக்கிய நாடுகள் சபை, சர்வதேச செஞ்சிலுவை சங்கம் மற்றும் ஏனைய சர்வதேச அமைப்புக்களில் வழிநடத்தல் மற்றும் ஒத்துழைப்புடன் செயற்பட கூடியவாறு காணாமல் போனவர்கள் தொடர்பாக தேடிப்பார்ப்பதற்கான நிரந்தமான செயலகமொன்றினை நிறுவுதல்.

4.11 காணாமலாக்கப்படுவர்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகளின் சபையின் சமவாயத்தை நடைமுறைப்படுத்தி, காணாமலாக்கச் செய்தல் ஓர் குற்றவியல் நடவடிக்கை என்பதை சட்டமாக்கி (இறந்தகாலத்தில் நடைப்பெற்றவைகளுக்கு அழுத்தத்தை கொடுக்கும் முகமாக)1971 இலிருந்து நடைப்பெற்ற ஆட்கடத்தல் காணாமலாக்குதல் மற்றும் சட்டத்திற்கப்பால் நடந்துள்ள அனைத்து கொலைகள் தொடர்பாக நீதியை நிலைநாட்டுவதற்கு குற்றவாளிகளுக்கு தண்டணை கொடுப்பதற்கு சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4.12 தற்பொழுது நிறுவப்பட்டுள்ள காணாமல் போனவர்கள் தொடர்பாக முறைப்பாடுகளை விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழு "பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்களின் மற்றும் சிவில் அமைப்புக்களின் வழிநடத்தலுக்கேற்ப மறுசீரமைக்கப்பட வேண்டும் அல்லது ரத்துச் செய்யப்பட வேண்டும்.

4.13 காணாமல் போனவர்கள் தொடர்பான அனைத்து தகவல்களையும் பகிரங்கப்படுத்தப்பட வேண்டும். 1971 ல் மற்றும் 1989ல் இடம்பெற்ற தெற்கு கலவரத்திலும் அதன் பின்பு கடந்த 3 தசாப்தங்களாக வடக்கைப் போலவே தெற்கில் இடம்பெற்ற அனைத்து காணாமலாக்குதலுக்கு அமைவாக அக்குடும்பத்திலுள்ளவர்களின் வேண்டுகோலின் அடிப்படையில் மட்டுமே மரண சான்றிதழ் வழங்கப்படவேண்டும். அவ்வாறு இணங்க முடியாதவர்களுக்கு சட்ட ரீதியாக ஏற்றுக்கொள்ளக்கூடிய காணாமல் போனவர்களுக்கான

சான்றிதழ் வழங்கப்பட வேண்டும். எந்த சான்றிதழை வழங்கினாலும் காணாமல் போனதிற்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் போது அவை எந்த விதத்திலும் தடையாக இல்லாதிருக்க வேண்டும்.

4.14 காணாமல் போனவர்களின் குடும்பங்களின் நலன் கருதி நிவாரண முறையொன்றினை உடனடியாக செயற்படுத்த வேண்டும்.

## 05 - சித்திரவதை தொடர்பான முன்மொழிவுகள்

5.1 சித்திரவதைகளை தடுப்பதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக அரசிற்கு ஆலோசனைகளை வழங்குவதற்காக சுயாதீன பிரிவு ஒன்றை ஆரம்பித்தல் மற்றும் பரிசீலனையொன்றை ஆரம்பித்தல். மேலும் சித்திரவதை உள்ளிட்ட அனைத்து குற்றங்களையும் ஒழிப்பதற்காக பொலிசாருக்கு அப்பால் வெளியே (பிரிந்து) வெறொரு சுயாதின பிரிவொன்றினை நிறுவுதல்.

5.2 பொலிஸ் நிலையம் அல்லது சிறைச்சாலைக்குள்ளே சித்திரவதைக்கு உள்ளானால் அல்லது கைது செய்யப்பட்டிருக்கும்போது சந்தேக நபர்கள் இறந்துவிட்டால் அது தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழு அல்லது உயர்நீதிமன்றம் பெற்றுக் கொடுத்த சிபாரிசு அல்லது கட்டளைகள் தொடர்பாக சட்டமாதிபர் உடனடியாக அவ்வதிகார சபைக்கெதிராக வழக்கு தாக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் அவ் வழக்குகள் மிக குறுகிய காலத்திற்குள் விசாரித்து முடிப்பதற்கு செயற்படுதல்.

5.3 இலங்கை அரசு சித்திரவதைக்கு எதிரான பிரகடணத்தில் முதல் விருப்பத்தேர்வு மரபொழுங்கு உட்பட சர்வதேச பிரகடணத்தில் பங்காளராகுதல் மற்றும் அவைகளை நடைமுறைப்படுத்தல்............ 21, 22வது உறுப்புரைகள் தொடர்பாக விசேட நிபந்தனைகளை நீக்கி கொள்வதற்காக செயற்பட வேண்டும்.

5.4 சந்தேக நபர்களை சட்ட வைத்தியரிடம் சுயாதீனமாக அனுப்புவதனூடாக அழுத்தத்திற்கப்பால் சந்தேக நபர்கள் சித்திரவதைக்கு உள்ளாகியுள்ளனரா என்பதினை தெரிந்து கொள்வதோடு நீதிமன்ற வைத்திய அறிக்கையை சந்தேக நபருக்கு பிரச்சினைகளல்லாது பெற்றுக்கொள்வதற்கான முறையை நிறுவுதலும் சட்ட வைத்தியர்களின் குறைபாடுகளை பூர்த்தி செய்வதற்கு உடனடியான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

5.5 நீதிமன்றத்திற்கு முன்னால் நிருத்தப்படும் சந்தேக நபர்கள் தொடர்பாக தனிப்பட்ட ரீதியாக தேடிப்பார்த்தல் மற்றும் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனரா என்பதினை நிரந்தரமாக விசாரித்தல்.

5.6 ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவினூடாக நிறைவேற்றிக் கொண்டுள்ள சித்திரவதை தொடர்பான பிரகடணம் மற்றும் உடன்படிக்கைகள் இலங்கைக்குள் நிறைவேற்றிக் கொண்டு அவைகளை அமுல்படுத்தி, சட்ட உருவாக்கத்திற்கு உடனடியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

5.7 PTA(பயங்கரவாத தடைச் சட்டம்) ஐ இரத்துச் செய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் PTA கீழ் இதுவரையும் தடுத்துவைக்கப்பட்டுள்ள சகல கைதிகளையும் உடனடியாக விடுதலை செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

## 06 - சுகாதாரத்துறை

6.1 சுகாதாரத்தை அடிப்படை உரிமையாக ஏற்று அரசியல் யாப்பிற்குள் உள்ளடக்கப்பட வேண்டும்.

6.2 நிறைவேற்றிக் கொள்ளப்பட்ட ஔடத சட்டம் திருத்தம் செய்யப்பட வேண்டும். தற்போது நிறைவேற்றிக் கொண்ட சட்டத்தின் விதிமுறைகளை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

6.3 தேசிய வரவு செலவு திட்டத்தில் சுகாதார துறைக்கு ஒதுக்கப்படுகின்ற நிதிச்சலுகைகள 5% வரை அதிகரித்தல்.

6.4 ஆரம்ப சுகாதார பாதுகாப்பு கோட்பாடுகளின் அடிப்படையில் சுகாதார செயற்திட்டத்தினை தயாரித்தல்.

## 07 - தேசிய வைத்திய முறை முன்னேற்றம்

7.1 தேசிய வைத்திய முறை முன்னேற்றத்திற்கு நிலையான செயற்பாடுகள் தொடர்பாக அவதானத்தை செலுத்தும் அமைச்சொன்றினை நிறுவுதல்.

7.2 தேசிய வைத்திய முறையை அதிகரிப்பதற்கு மாற்று வைத்திய முறைகளுக்கான தேசிய வரவுசெலவு திட்டத்தில் உலக உணவு சுகாதார அமைப்பினால் முன்மொழியப்பட்டுள்ள 5%ஐ பெற்றுக்கொடுத்தல் அல்லது குறைந்தது 3% யாவது ஒதுக்குதல்.

7.3 1961 ல் ஆயுர்வேத சட்டத்தினை நடைமுறைப்படுத்தி தேசிய பாரம்பரிய சர்வாங்க வைத்தியம், உடைதல், சிதைதல் மருத்துவம் மற்றும் கால்நடை மருத்துவத்திற்கான நிதி நிலையை உருவாக்கி தேசிய கால்நடை மருத்துவத்தை மேம்படுத்துவதற்காக தேசிய மருத்துவர்களின் சங்கத்தைப் பதிவு செய்தல்.

7.4 பாரம்பரிய மருத்துவ முறையை வளர்ப்பதற்காக மிஹிந்தலையில் முன்மொழியப்பட்ட வைத்திய சாலையை ஆரம்பித்து பாரம்பரிய வைத்தியர்களுக்கு நிர்வாக பொறுப்பை ஒப்படைத்தல்.

7.5 இயற்கை சுற்றாடல் தொகுதிகள் மற்றும் காடுகளை பாதுகாத்து தேசிய வைத்தியத்திற்கு தேவையான தாவர மூலிகைகளை நிலையானதாக பெற்றுக் கொள்வதற்கு உகந்த செயற்திட்டத்தினை தயாரித்தல்.

7.6 அல்மாட்டா வெளியீட்டுக்கேற்ப பாரம்பரிய மற்றும் மாற்று வைத்திய முறைகளை வளர்ப்பதற்கு அங்கத்தவர்கள் 15 பேரைக்கொண்ட தேசிய குழுவை உருவாக்குவதோடு மிருக மற்றும் சர்வாங்க மருத்துவத்தை செய்யும் பாரம்பரிய மருத்துவர்கள் 5வருக்கு வாய்ப்பை வழங்குவதோடு கம்பஹ மற்றும் கொழும்பு ஆயுர்வேத மற்றும் பாரம்பரிய வைத்தியர்களுக்கு அங்கத்துவத்தை பெற்றுக்கொடுத்தல்.

## 08 - கல்வித்துறை

8.1 கல்வித்துறைக்காக தேசிய வரவு செலவு திட்டத்தில் அரசு இணங்கியுள்ள 6% நிதியை ஒதுக்கி கொள்கை வழியிலான உடன்படிக்கைகளை செயற்படுத்தல்.

8.2 தேசிய கல்வி முறையிலுள்ள போட்டித்தன்மை காரணமாக பிள்ளைகளிடையே ஏற்பட்டுள்ள போட்டித்தன்மை மற்றும் அழுத்தங்களை குறைப்பதற்கு உகந்த விதமாக ஆசியாவிலுள்ள வளர்ச்சிமிக்க கல்வி முறைமையை உருவாக்குவதற்கு உகந்த விதமான கல்வி மறுசீரமைப்புக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

8.3 கல்வி தனியார்மயமாக்கப்படும் கொள்கையினால் கல்வியை விற்பதற்கான செயற்பாடுகளுக்கு இடமளிக்கக்கூடாது.

8.4 சிறந்த ஆளுமை, புதிய படைப்பகளுடான, சிறந்த சிந்தனையுடன் கூடிய பிரஜைகளை உருவாக்குவதற்கு தேவையான கல்வி மீள் கட்டமைப்பை ஏற்படுத்தல்.

## 09 - பெண்களுக்கான உரிமைகளை பாதுகாப்பதற்காக

9.1 சர்வதேசத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள மற்றும் இலங்கையும் உடன்பட்டுள்ள மனித உரிமைகள் பிரகடணம் மற்றும் CEDAW பிரகடணம் (பெண்களுக்கெதிரான அனைத்து விதமான பாகுபாடுகளையும் இல்லாதொழித்தல்) உள்ளிட்ட பிரகடணங்களில் உள்ளடக்கப்படடுள்ள காரணிகளை நடைமுறைப்படுத்தல், மேலும் வீட்டு வன்முறைக்கெதிரான சட்டத்தினை உடனடியாக செயற்படுத்தலுக்கு நடவடிக்கை எடுத்தல்.

9.2 பெண்களின் சமயுரிமையை உறுதி செய்யும் வகையில் தேசிய வளங்களின் அடிப்படையில் உற்பத்தி செயன்முறைகளை நிறுவுதன் மூலமாக பெண்களின் பாதுகாப்பை உறுதிச்செய்தல் மற்றும் சேவைக்கு ஒப்பீடான வகையில் நியாயமான ஊதியத்தினை பெற்றுக்கொடுத்தல்.

9.3 தீர்மானங்களை மேற்கொள்ளும் அனைத்து கட்டமைப்பிற்குள்ளும் பெண்களின் பங்களிப்பை 30% வீதம் வரை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

9.4 சுயாதீன பெண்கள் ஆணைக்குழுவொன்றினை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

9.5 பெண்களை பாதிப்புக்குள்ளாக்குவதான மனப்பாங்கினை சமூகத்திலிருந்து இல்லாதொழிப்பதற்கான கல்வி செயற்பாடொன்றினை உருவாக்குதல்.

9.6 வீட்டு பணி சேவைகளையும் தொழிலாக ஏற்றுக்கொள்ளும் சட்டத்தினை உருவாக்க வேண்டும்.

9.7 சேவை செய்யும் இடங்களுக்கு அண்டியதாக மதிய நேர குழந்தைகள் பாராமரிக்கும் நிலையங்களை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் விஷேட விதமாக வர்த்தக வலயங்களில் வேலைபுரியும் பெண்கள், பெருந்தோட்டத்துறையில் பணிபுரியும் பெண்கள் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் தொழில்புரியும் வீட்டு பணிப்பெண்களைப் போலவே முறைசார் மற்றும் முறைசாரா சேவை நிலயங்களில் தொழில்புரியும் பெண்களின் பாதுகாப்பை உறுதிச் செய்வதற்கு தகுந்த செயற்பாடுகளை மேம்படுத்த வேண்டும்.

9.8 கர்ப்பிணி தாய்மாரின் இரத்தசோகை மற்றும் பிள்ளைகளின் போஷாக்கின்மைக்காக மிகவும் சிறந்த கொள்கையின் அடிப்படையில் தேசிய போஷாக்கு வேலைத்திட்டமொன்றினை தயாரித்தல்.

9.9 பால்நிலை தொடர்பாக உண்மையான அர்த்தத்தினை எடுத்துக்கூறும் ஒழுக்கம் நிறைந்த ஒரு மனிதனை உருவாக்குவதற்கு அடிப்படையாக அமையும் ஆண் பெண் சமூகநிலை தொடர்பான விசேட கல்வித்திட்டம் ஒன்றினை செயற்படுத்த வேண்டும். குடும்பம் தொடக்கம் அனைத்து சமூக கட்டடைப்புகளுக்குள்ளும் இது தொடர்பான அறிவை வளர்ப்பதற்கான செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்காக அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களைப் போலவே சிவில் சமூக செயற்பாட்டாளர்களின் ஒத்துழைப்புகளையும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

9.10 யுத்தத்தினால் இடம்பெயர்ந்த மக்களுக்கு காணி உரிமையை மீள பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கையின்பொழுது, பெண்களின் காணி உரிமை உட்பட அனைத்துவிதமான உரிமைகளையும் உறுதி செய்வதற்கான சட்டத்தை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

9.11 குடும்பத் தலைமைத்துவப் பெண்களின் சமூக பாதுகாப்பை போன்றே அவர்களின் வாழ்வாதாரத்தினை கட்டியெழுப்புவது தொடர்பான கவனத்தினை செலுத்தி உகந்த செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். அதைப் போலவே குடும்பத் தலைமைத்துவ பெண்களுக்கு உகந்த மானசீக மற்றும் சமூக நிவாரண செயற்பாட்டினை தயாரித்தல்.

9.12 பெண்களின் பாடசாலையை கல்வியை தொடர்ச்சியாக பயில்வதற்கு வசதிகளை செய்து கொடுத்தலைப் போன்றே அவர்களின் சமூக மற்றும் அரசியல் அறிவை வளர்ப்பதற்கான கல்விசார் செயற்திட்டங்களை செயற்படுத்த வேண்டும்.

## 10 - கலாச்சாரம் மற்றும் கலை

10.1 நல்லாட்சியை செயற்படுத்துவதற்கு உகந்த பிரஜைகளை உருவாக்குவதற்கு கலை மற்றும் கலாச்சாரத்தைப் பாவித்தல்.

10.2 சிறந்த கலை மற்றும் கலாச்சார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அனைத்து பிரஜைகளுக்கும் சம உரிமையை பெற்றுக்கொடுத்தல்.

10.3 கலை மற்றும் கலாச்சாரம் என்பன கல்விமுறைக்கு முக்கியமல்ல என்றல்லாமல் அவை கல்வி முறையில் மிக முக்கியமான காரணி என்பதை புரிந்துக்கொள்ள வேண்டும்.

10.4 ஆழமான, மிகச்சிறந்த நல்லிணக்கம் மற்றும் சிறந்த மாற்றத்திற்கான வலுமிக்க ஊடகமாக கலை மற்றும் கலாசாரத்தை பயன்படுத்துதல்.

10.5 யுத்தத்தினால் பாதிப்புக்குள்ளான பிரதேசங்களில் மீளவும் கலை மற்றும் கலாச்சார நடவடிக்கைளை ஆரம்பித்தல்

10.6 இலங்கையின் கலை வளர்ச்சிக்காக அனுசரனை வழங்கும் மற்றும் அதற்காக முன்னின்று உழைக்கின்ற பிரதான சுயாதீன அமைப்பாக இலங்கை கலா மன்றத்தை கட்டியெழுப்புதல்

10.7 இலங்கையின் சமூக மற்றும் கலாச்சார வாழ்க்கையின் பிரதான வகிபங்கை ஆற்றுவதற்கான கருவியாக கலாச்சார அமைச்சை வலுப்படுத்தல்.

10.8 தடைகளை அகற்றி கலை உரிமையை பரம உரிமையாக உறுதிச்செய்தல்.

10.9 எதுவிதமான பயம் அல்லது சந்தேகத்திற்கப்பால் கருத்துக்களை கலை வடிவமிக்கதாக வெளிப்படுத்துவதற்குள்ள உரிமையை மற்றும் கலைஞர்களின் பாதுகாப்பை உறுதிசெய்தல்.

10.10 கலையின் அதி முக்கியத்துவம் தொடர்பாக மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களை அறிவூட்டுவதன் நிமித்தம் தற்பொழுதுள்ள கல்விமுறை திட்டத்தில் மாற்றங்களை ஏற்படுத்தல்.

## 11 - மதச்சுதந்திரம்

11.1 துவேசமிக்கதான கருத்துக்கள் தொடர்பான சட்டத்தை மறுசீரமைப்பதற்கான உடனடி நடவடிக்கைகளை எடுத்தல்.

11.2 அரசு மதத்தின்(சமய) பிடியிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும். தனிப்பட்ட சுதந்திரத்திற்குள் அனைவரும் தத்தங்களுடைய மதங்களை பின்பற்றுவதற்கான சுதந்திரத்தினை உறுதிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## 12- இயற்கைச் சூழலை பாதுகாப்பதற்கான முன்மொழிவுகள்

12.1 பசுமையான பொருளாதாரத்திற்குள் அடிப்படையாக அமைந்த அபிவிருத்தி பொறிமுறை ஒன்றை நாட்டில் நடைமுறைப்படுத்த வேண்டும்.

12.2 நாட்டிற்கு பாதகமான விதத்தில் தற்காலத்தில் செயற்படுத்தப்படும் அனைத்துவிதமான அபிவிருத்தி செயற்திட்டங்கள் தொடர்பாக மீண்டும் மீளாய்வுகளை நடாத்தி அச்செயற்திட்டஙகளை சிறந்த கருவியொன்றிற்குள் உள்ளடக்குதல் அல்லது அவ்விதத்தில் உள்ளடக்க முடியாத செயற்திட்டங்களை இடை நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

12.3 அனைத்துவிதமான இயற்கை சூழற்தொகுதிகளையும் ஒன்றிணைக்கும் வகையிலான வியாபித்த செயற்திட்டத்தினை செயற்படுத்துதல்.

12.4 வன ஜீவராசிகளின் பாதுகாப்பு கட்டளைச் சட்டங்கள் மற்றும் சுற்றாடல் கட்டளைச் சட்டங்கள் அனைத்தும் எதுவிதமான அழுத்தங்களுக்கும் அடிபணியாமல் செயலில் ஈடுபடுத்துவதற்கான கருவியொன்றினை தயாரித்தல்.

12.5 வன ஜீவராசிகளினால் கிராமிய மக்களுக்கு ஏற்படும் அச்சுறுத்தல்களை தடுப்பது தொடர்பான தேசிய கொள்கையை ஏற்படுத்தி, செயற்படுத்துதல் மற்றும் முக்கிய பிரச்சினையாக உருவாகியுள்ள காட்டு யானைகளின் அச்சுறுத்தல்களை தடுப்பதற்காக விஷேட செயற்திட்டத்தினை உருவாக்குதல்.

## 13- காணி உரிமையை உறுதிச்செய்தல் மற்றும் இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியேற்றுதல்

13.1 இடம்பெயர்ந்ந மக்களின் மற்றும் தமது காணிகள் கொள்ளையடிக்கப்படுதலுக்குட்பட்ட காணி உரிமையாளர்களதும் அடிப்படை காணி உரிமைகளை பெற்றுக்கொடுப்பதற்கு; 2015 மாசி மாதம் 11ம் திகதி நாடாளுமன்றத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தினை அடிப்படையாகக் கொண்ட உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

13.2 மீள்குடியேற்ற செயற்பாடுகளின் போது இராணுவ முகாம்களைச் சுற்றி மேற்கொள்ளப்படுகின்ற மீள்குடியேற்றங்களை இடைநிறுத்துதல்.

13.3 மீள்குடியேற்றத்திற்கு தேவையான வசதிகள் மற்றும் வாழ்வாதார வசதிகளை வழங்குவதற்கு அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களுடன் உடனடியாக நடவடிக்கைகளை எடுத்தல்.

13.4 தனியார் துறைகளின் செயற்பாடுகளில் இராணுவ தலையீடுகள் இடம்பெறுவதை உடனடியாக தடுத்து நிறுத்துதல்.

13.5 கரையோர மக்கள் மற்றும் விவசாயிகள் தங்களது சொந்த கிராமங்களை நோக்கிச் செல்வதற்கு இடமளிப்பதற்கு உடனடியான நடவடிக்கைகளை எடுத்தல்.

13.6 உலக உணவு மற்றும் விவசாய அமைப்பின், காணி ஆட்சியுரிமை தொடர்பான வழிகாட்டல் கோவையை நிறைவேற்றி தேவைக்கேற்ப கொள்கைகளை உருவாக்குதல்.

13.7 நாட்டின் ஏனைய மக்களுக்கு உரிய அனைத்து உரிமைகளும் மலையகத்தில் வாழுகின்ற மக்களுக்கும் சமமாக கிடைக்க வேண்டும் என்பதை உறுதிப்படுத்த வேண்டும். (சமமாக கிடைப்பதை உறுதிச்செய்ய வேண்டும்)

## 14- பாதுகாப்பான உணவு மற்றும் நிலையான விவசாயத்திற்கான முன்மொழிவுகள்

14.1 “கல்யிபோசெட்” உள்ளிட்ட சிறுநீரக நோய்களுக்கு ஏதுவான காரணிகள் என கண்டுபிடிக்கப்பட்ட அனைத்து கிருமிநாசினி இறக்குமதிகளையும் தடைசெய்தல் மற்றும் இதுவரையில் சந்தையிலுள்ள தொகைகளை உடனடியாக சந்தைகளிலிருந்து அகற்றுதல்.

14.2 இரசாயன பசளை மானியத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீட்டை இயற்கை விவசாயத்தினை வியாபிப்பதற்கு தேவையான ஆய்வுகளை மேற்கொள்வதற்கு மற்றும் விவசாயிகளை ஊக்குவிக்கும் செயற்திட்டத்திற்காக பயன்படுத்துதல்.

14.3 விதைகளுக்கான விவசாயிகளின் உரிமையை உறுதிச்செய்தல். பாரம்பரிய விதைகளை பாதுகாப்பதற்கு மற்றும் அவற்றை வியாபிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரசு செயற்திட்டமொன்றினை அமுல்படுத்துதல்.

14.4 சிறியளவிலான உணவு உற்பத்தியாளர்களுக்கு காணி, நீர் மற்றும் ஏனைய இயற்கை வளங்கள் மட்டிலுள்ள உரிமைகளை உறுதிச்செய்தல். அவைகள் தொடர்பான தீர்மானங்களை எடுக்கும் பொழுது அவர்களின் நேரடி ஒத்துழைப்பினை பெற்றுக்கொள்ளவதோடு, நிலையான பயன்பாட்டை உறுதிச்செய்யும் கொள்கைகளை நடைமுறைப்படுத்தல்.

14.5 இரசாயன விவசாயத்திலிருந்து நாட்டை விடுதலையாக்குவதற்காக இயற்கைக்குகந்த தேசிய வளங்களை அடிப்படையாகக் கொண்ட நிலையான விவசாய கொள்கையை உருவாக்குதல்.

14.6 விவசாய உற்பத்திகளுக்கான நிர்ணயித்த விலையை பெற்றுக்கொடுக்கும் முறையை நடைமுறையில் யதார்த்தமாக்கி கொள்வதற்காக வருடம் முழுவதும் உற்பத்திகளை விலைக்கு வாங்குதல், கலஞ்சியப்படுத்துதல் மற்றும் பகிர்தளித்தலுக்கான அரச கருவியொன்றினை உடனடியாக உருவாக்குதல் வேண்டும்.

14.7 சிறு உணவு உற்பத்தியாளர்களை ஒட்டுமொத்த உணவு உற்பத்திச் செயற்பாட்டினுள்ளே (உற்பத்தி, தயார்படுத்தல், பெறுமானங்களை கூட்டுதல், பகிாந்தளித்தல் மற்றும் விற்பனை) வலுப்படுத்தல் மற்றும் அவர்களுக்கிடையில் மிக நெருக்கமான தொடர்புகளை வளர்பதனுடாக உற்பத்தியாளர்களுக்கும், நுகர்வாளர்களுக்கும்(வாடிக்கையாளர்) சாதாரணமான விலையை பெற்றுக்கொடுக்கும் கருவியொன்றினை உருவாக்குதல்.

14.7 உலர்வலயத்திலுள்ள அனைத்து வாவிகள் மற்றும் கங்கை(ஆற்றுத்தொகுதிகள்) தொகுதிகள், மத்திய மலை நாட்டின் நீர் போசாக்கு பிரதேசங்களை பாதுகாத்தல் மற்றும் நிலைத்திருக்கக்கூடிய வகையில் பயன்படுத்துதல்.

14.8 பெண் உணவு உற்பத்தியாளர்களினால் பொருளாதாரம் மற்றும் உணவு பாதுகாப்பிறகாக வழங்கப்படுகின்ற ஒத்துழைப்புகளை அளவிடுவதற்கான சுட்டியை(அளவீடு) உருவாக்குதல் மற்றும் அச்சுட்டிகளை தேசிய பொருளாதார சுட்டிகளுடன் இணைக்க வேண்டும். விவசாய மற்றும் இயற்கை வளங்களின் உரிமைகள் தொடர்பான கொள்கைகளை தயாரிக்கும்பொழுது பெண்களை முக்கியமாக கருத வேண்டும்.

14.9 நுகர்வாளர்கள் மற்றும் தேசிய உணவு உற்பத்தியாளர்களதும் உரிமையை பாதுகாப்பதற்காக அரசாங்கமானது உணவு வர்த்தக சந்தையில் தனது தீர்மானமிக்கதான தலையீட்டைச் செலுத்த வேண்டும்.

## 15- தேசிய மீனவன் மற்றும் மீனவ மக்கள் வாழ்க்கையை முன்னேற்றுதல்

15.1 நிலையான சிறுமீனவ கைத்தொழிலை பாதுகாத்தலுக்காக அடிப்படை தன்னார்வ வழிகாட்டலை ஏற்றுக்கொண்டு அதை அனுமதித்து தேவையான கொள்கை உருவாக்கத்திற்கு நடவடிக்கை எடுத்தல்.

15.2 தேசிய மீனவ கைத்தொழிலில் பயன்படுத்தம் அனைத்துவித பாதகமான மற்றும் அழிவுமிக்கதான உபகரண பயன்பாட்டிற்கு எதிரான தடையை இருக்கமாக நடைமுறைப்படுத்தி சிறுமீனவனை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

15.3 ஐரோப்பிய சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட வழிக்காட்டலுக்கு ஏற்ப தேசிய மீனவ கைத்தொழிலில் கண்காணிப்பு மற்றும் செயற்பாட்டுத் திட்டங்களை தயாரித்து செயற்படுத்துவதனூடாக, ஐரோப்பிய சங்கத்தினால் இலங்கையின் மீன் இறக்குமதிக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தடையின் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள தேசிய பல்தின மீன்பிடி தொழிலை பாதுகாத்தல்.

15.4 இந்திய மீனவர்கள் தேசிய கடல் எல்லையை ஆக்கிரமிப்பதினால் ஏற்பட்டுள்ள பாதகமான பொருளாதார மற்றும் சுற்றாடல் பாதிப்பை குறைப்பதற்காக தேசிய கடல் எல்லைகளுக்குள் இந்திய படகுகள் உட்பிரவேசித்தலை தடுப்பதற்கான நடவடிக்கைகளை கடற்படையினரின் மேற்கொள்கின்ற அதேவேளை இராஜ தந்திரமான கலந்துரையடால்களினூடாக ஏற்படுத்திக் கொள்ளும் உடன்படிக்கைகளின் அடிப்படையில் நிரந்தரமான தீர்வுகளை தேடுதல்.

15.5 இடம் பெயரச் செய்து உள்நாட்டிலேயே அகதிகளாக்கப்பட்டுள்ள சகல மீனவக் குடும்பங்களும் தங்களுடைய சொந்த காணிகளுக்கு மீளச் செல்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியதோடு பாரிய பாதிப்புக்குள்ளாயிருக்கும் மீனவ பெண்களினுடைய விசேடமாக குடும்பத் தலைமைத்துவ பெண்கள் மற்றும் பிள்ளைகள் தொடர்பாக அதி விசேட அவதானத்தை செலுத்த வேண்டும்.

15.6 யுத்தத்தினால் அழிவடைந்த அனைத்துவித அடிப்படை வசதிகளையும் மீள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

15.7 யுத்தத்திற்கு பிறகு வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களுக்கு பருவகால இடம்பெயர்வாகச் சென்று அப்பிரதேசங்களின் மீனவ மக்களின் அனுமதி மற்றும் இணக்கப்பாடுகள் இன்றி அரசியல் மற்றும் இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படுகின்ற பாரம்பரிய முறைக்கு எதிரான பருவகால மீனவர் இடம்பெயர்வு செயல்களை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

## 16- பெருந்தோட்டத்துறை மக்களின் வாழ்க்கையை வலுப்படுத்துவதற்கான முன்மொழிவுகள்

16.1 பெருந்தோட்டத்துறையில் வாழும் மக்களை பிரஜைகளாக மதித்து நாட்டின் ஏனைய இனங்களுக்கு கிடைக்க வேண்டிய உரிமைகள், அரச சேவைகள் மற்றும் காணியுரிமைகளை அவ்வாறே பெற்றுக்கொடுப்பதற்காக உறுதிச்செய்ய வேண்டும்.

16.2 கிராம சேவை பிரிவுகள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவுகளை மீள அடையாளப்படுத்தி மக்கள் சதவிகிதத்திற்கு ஏற்ப தங்களுக்கு கிடைக்க வேண்டிய சேவைகளை சாதாரணமாக பெற்றுக்கொள்வதற்காக மலையகத்தில் வாழும் மக்களுக்கு சந்தர்ப்பத்தினை உருவாக்கிக் கொடுத்தல் வேண்டும்.

16.3 ஆரம்பமாக 20 பர்ச்சஸ் காணியை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதோடு அதன் மூலமாக உணவு பாதுகாப்பு மற்றும் போஷாக்கு மற்றும் வாழ்வதற்கு தேவையான வசதிகளை வழங்குதல், மத்திய மலை நாட்டின் நீர் வளங்களை பாதுகாத்தல்.

16.4 பெருந்தோட்டத்துறை மக்களின் பிரதான கோரிக்கையான தனி வீட்டுக்கான உரிமையை உறுதிச்செய்தல், அதற்கு போதியளவிலான காணியை ஒதுக்கி கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

16.5 அரச மொழிக் கொள்கையை முறையாக செயற்படுத்துவதனூடாக மலையக தமிழ் மக்களுக்கு தங்களினுடைய மொழியில் அரச சேவைகளை பெற்றுக் கொடுப்பதற்கு சந்தர்ப்பத்தினை பெற்றுக் கொடுத்தல்.

16.6 அனர்தத் அபாயமான வலயங்களில் வாழுகின்ற மக்களுக்கு பாதுகாப்பான இடங்களில் தேவையான வசதிகளை வழங்குதல்.

16.7 பெருந்தோட்டத்துறை மக்களின் நிர்வாக செயற்பாடுகளை தோட்ட சங்கங்களின் நிர்வாகத்திலிருந்து நீக்கி அரச கட்டுபாட்டிற்கு கொண்டு வருவதோடு நாட்டின் ஏனைய அனைத்து ஜாதிகளுக்கும் கிடைக்கும் பிரஜா உரிமையை பெருந்தோட்டத்துறை தமிழ் மக்களுக்கு பெற்றுக்கொடுக்க வேண்டும்.

## 17- தொழிலாளர் மக்கள் தொடர்பான முன்மொழிவுகள்

17.1 ஊழிய சேமலாப நிதியை பாதுகாப்புடன் சேவையாளர்களுக்கு பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

17.2 சேவையாளர்களுக்கு சாதகமான சேவை சூழலை மற்றும் சேவை ஒழுங்குமுறை ஒன்றை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

## 18. இந்த முன்மொழிவுகளை முன் வைக்கின்ற மக்கள் அமைப்புக்கள் (சமூக அமைப்புக்கள்)

1. காணி மற்றும் விவசாய மறுசீரமைப்பு இயக்கம், ராஜகிரிய
2. தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம், நீர்கொழும்பு
3. ரயிட்டு லயிப் மனித உரிமைகள் மையம், நீர்கொழும்பு
4. சவிஸ்த்திரி தேசிய இயக்கம், கொழும்பு
5. சமய, சமூக நடுநிலையம், கொழும்பு
6. காணாமல் போனவர்களின் குடும்ப ஒன்றியம், நீர்கொழும்பு
7. மாற்றுக் கொள்கை மையம், கொழும்பு
8. வர்க்க வேறுபாடு மற்றும் பாகுபாடு காட்டுதலுக்கு எதிரான சர்வதேச அமைப்பு
9. காணாமல் போனவர்களை தேடியழையும் குழு
10. மனித உரிமைகள் அபிவிருத்தி மையம்
11. ஐக்கிய தொழிலாளர் சம்மேளனம், கொழும்பு
12. வர்த்தக மற்றும் தொழில்நுட்ப துறை சேவை சங்கம், கொழும்பு
13. செங்கொடி தொழிற்ச் சங்கம், தெனியாய
14. அரசியல் கைதிகளை விடுதலைச் செய்வதற்கான அமைப்பு
15. தேசிய சுதந்திர தொழிற்ச் சங்கம்

16. டாபிது சாமுகிய, கட்டுநாயக்கா
17. ஸ்த்ரீ மத்திய நிலையம்
18. கிறிஸ்தவ பாதுகாப்பு முன்னணி
19. நிலையான விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையம், ராஜகிரிய
20. விகல்பனீ பெண்கள் தேசிய அமைப்பு, மாலபே
21. சுதந்திர ஊடக அமைப்பு
22. இன்பொம் மனித உரிமை தகவல் நிலையம்
23. சமூக கல்வி மையம், மாலபே
24. காண்தா சக்தி, கொழும்பு
25. ஜனவபோதய அமைப்பு, நீர்கொழும்பு
26. விதைகளை பாதுகாப்பதற்கான தேசிய இயக்கம்
27. ஐக்கிய மீனவர்கள் மற்றும் மீனவர் தொழிலாளர் காங்கிரஸ்
28. மக்கள் சுகாதார அமைப்கு
29. தேவசரண அபிவிருத்தி மையம், இப்பாகமுவ
30. ஶ்ரீ விமுக்தி மீனவ பெண்கள் அமைப்பு, நீர்கொழும்பு
31. சுவிஸ்த்ரி மாத்தறை அமைப்பு
32. தெற்கு மீனவ அமைப்பு, காலி
33. தெற்கு மீனவ அமைப்பு, மாத்தறை
34. இளைஞர் வளங்கள் அபிவிருத்தி அமைப்பு, மாத்தளை
35. மக்களை பலப்படுத்தும் இயக்கம், கொழும்பு
36. இணையத்தள ஊடக அமைப்பு, கொழும்பு
37. ஜீவிதயே பதனம, நீர்கொழும்பு
38. யுக்திய செமட்ட அமைப்பு
39. களுத்துறை மாட்ட மீனவ ஒத்துழைப்பு
40. புத்தளம் மாவட்ட மீனவ ஒத்துழைப்பு
41. பானம பத்து பாதுகாப்பு ஒன்றியம்
42. களப்பு மீனவ அமைப்பு
43. மக்கள் சுகாதார பாதுகாப்பு அமைப்பு, கொழும்பு
44. மக்கள் ஒத்துழைப்பு அமைப்பு
45. மன்னார் மாவட்ட மீனவ ஒத்துழைப்பு இயக்கம்
46. நீர்கொழும்பு களப்பு மீனவ மக்கள் அமைப்பு
47. கற்பிட்டி தீவு மக்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கான அமைப்பு
48. ஆழ்கடலில் காணாமல் போனவர்களின் குடும்ப ஒன்றியம்
49. திருகோணமலை மாவட்ட மீனவ ஒத்துழைப்பு இயக்கம்

50. அம்பாறை மாவட்ட மீன ஒத்துழைப்பு இயக்கம்
51. மட்டக்களப்பு மாவட்ட மீனவ விவசாய இயக்கம்
52. இசுரு ஜீவனோதய மன்றம், அங்குரன்கெத
53. மத்திய மாகாண சுகாதார அபிவிருத்தி ஒன்றியம்,
54. இலங்கை விவசாய அமைப்பு, அநுராதபுரம்
55. சமூக அடிப்படை வளங்கள் முகாமைத்துவ மன்றம், மதவாச்சி
56. நிகலச சமூக அமைப்பு, ராஜாங்கனை
57. தரனீய விவசாய கலாச்சாரத்திற்கான வட மத்திய மாகாண மக்கள் ஒன்றியம்
58. ஸ்ரீ லங்கா கிராமிய அபிவிருத்தி மன்றம், மெதிரிகிரிய
59. மானவ பிரபோத பதனம, காடகஸ்திகிலிய
60. க்ராஸ் ரூட் பயிற்சி அமைப்பு, அருணாயக்க
61. ஜனவிஜய சுற்றாடல் விவசாய அமைப்பு, இரத்தினபுரி
62. ஒருங்கிணைந்த பெண்கள் மகா சங்கம், வெலிகபொல
63. தேசிய விதைகள் பாதுகாப்பதற்கான இயக்கம், எப்பாவெல
64. பாதரட்ட சமூக அபிவிருத்தி அமைப்பு, தெனியாய
65. திஸ்ஸ ஜய சிறுவர் நலன்புரி அமைப்பு, மாத்தறை
66. சிரிலிய பெண்கள் விவசாய அமைப்பு, மினிபே
67. ஸ்வசக்தி அபிவிருத்தி மன்றம், மையங்கனை
68. மலையக பெண்கள் அமைப்பு, கண்டி
69. விசாகா குலகன அபிவிருத்திச் சங்கம், கண்டி
70. குிராமிய ஸ்வசக்தி அத்வெல அமைப்பு, மாபாகடவெவ
71. ஊவவெல்லஸ்ஸ பெண்கள் அமைப்பு, வெல்லவாய
72. உயிர் பல்வகை ஆராய்ச்சி, தகவல் மற்றும் பயிற்சி நிலையம், பதுளை
73. ஊவ கிராமிய அபிவிருத்தி மையம், மொனராகலை
74. தோட்டப்புற அபிவிருத்தி மன்றம், பதுளை
75. தோட்ட சமூக அபிவிருத்தி அமைப்பு, மஸ்கெலியா
76. மனித உரிமை மற்றும் சமூக அபிவிருத்தி மையம், ரிதிகம
77. சேருபிட்டிய சுயங்பாலித பால் உற்பத்தியாளர்களின் அமைப்பு, சேருபிட்டிய
78. சிறு விவசாயிகளின் இயற்கை பசளை உற்பத்தி திரட்டு மற்றும் விற்பசைன் சங்கம்
79. தென் மாகாண இயற்கை விவசாய வலையமைப்பு, மாத்தறை
80. ஊவா நச்சுத் தன்மையற்ற விவசாய ஒன்றியம், பதுளை

81. விவசாய தகவல் மையம், இப்பாகமுவ
82. துன்கோரல ஔடதம் மற்றும் அலங்கார தாவரங்கள் வளர்ப்பச் சங்கம், ருவன்வெல்ல
83. கேமி காண்தா பெரமுன, காலி
84. இயற்கை கற்கை கல்வி நிலையம், ராஜகிரிய
85. ஸ்த்ரீ சம்பத் மத்திய நிலையம், இப்பாகமுவ
86. மீகத சுற்றாடல் இயக்கம், மாவெவ
87. முற்போக்கு விவசாய அமைப்பு, கடுல்ல
88. சுற்றாடல் பாதுகாப்பு பொறுப்பு, ஹோமாகமை
89. சமானாத்மதா சாமயிகய, கொழும்பு
90. பசுமை பிரஜைகள் அமைப்பு, இரத்மலானை
91. இலங்கை சுற்றாடல் சம்மேளனம், கொழும்பு
92. சத்ய சொபா சங்ரக்சன பதனம, பொரலெஸ்கமுவ
93. மீதல மிதுரோ சுற்றாடல் அபிவிருத்தி அமைப்பு, ஒலபொடுவ
94. தேசிய விதைகள் வளர்ப்பு மாவட்ட அமைப்பு, ஓபநாயக்கா
95. ஸ்வசக்தி சங்வர்தன பர்சதய, ஊவ பரணகம
96. ஹரித மிதுரோ சுற்றாடல் அமைப்பு, கொடவிட
97. ஊவ சக்தி பதனம, பதுளை
98. ஸ்ரீ லங்கா சொபா சங்சதய, நுகேகொட
99. உடுநுவர பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவச் சங்கம், உடுநுவர
100. தெஹென சாபாகித்த பதனம, பிலிமதலாவ
101. மலையக சுற்றாடல் அபிவிருத்தி ஒன்றியம், கம்பொல
102. சுற்றாடல் மற்றும் கலாச்சார ஆராய்ச்சி நிலையம், நாலபிடிய
103. மக்கள் ஒத்துழைப்பு இயக்கம், காலி
104. திதுல அபிவிருத்தி மன்றம், மாத்தறை
105. தேசிய விதைகள் பாதகாப்பாளர்களின் கீழ்நிலை விவசாய உற்பத்தி மற்றும் விற்பனை அமைப்பு
106. பிரஜா அபிவிருத்தி சங்சதய, மாத்தறை
107. மானவ சக்தி பதனம, காலி
108. குமுது விவசாய அமைப்பு, மாத்தறை
109. ப்ரீமாச் அமைப்பு, கொழும்பு
110. காணாமல் போனவர்களின் குடும்ப அங்கத்தவர்களின் அமைப்பு-கொழும்பு
111. பிரஜைகள் குழு-கம்பஹ
112. டிரான்பேரன்சி இன்டர்நெஷனல்- இலங்கை

மறுசீரமைப்புகளுடன் வெற்றிகரமான தேசத்தை நோக்கி!

**வீதி எதிர்ப்பு**
**சிவில் அமைப்புக்களின் செயற்பாடு,**
இல.10, மல்வத்த வீதி நீர்க்கொழும்பு
இல.185/2/, கொஸ்வத்த தலங்கம வடக்கு
இல.555, கொழும்பு வீதி, கட்டுநாயக்க